

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 25

யாழ்ப்பாணம் மாசி 23 முஹர்ரம் 19 திங்கட்கிழமை (6-3-72)

நவநாகரிக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி 'இரத்தினம்ஸ்'
50.கன்னாதிட்டி.யாழ்ப்பாணம்.

பங்களாதேஷை இலங்கை அங்கீகரித்தது!

கோட்டை, ஞாயிறு பங்களாதேஷை தன்னுரிமையுள்ள ஒரு சுதந்திர நாடாக இலங்கை அரசாங்கம் இன்று அங்கீகரித்தது.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா இன்று அனுப்பி வைத்த ஒரு செய்தியில் இலங்கை அரசினதும் இலங்கை மக்களினதும் நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவும் நெருங்கிய ஒத்துழைப்பும் விரைவில் ஏற்படும் நாளை எதிர்பார்த்திருப்பதாக பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

கோவில், பாடசாலை தவிர்ந்த இடங்களில் கள்ளுதவறணைகள்

சங்கத்தில் சேருவதற்கு சீவல்தொழிலாளர் ஆதரவு

யாழ்ப்பாணம், திங்கள் கொடிகாமத்தில் நேற்று முன்தினம் நடந்த கள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்க ஆரம்ப கூட்டத்தில் சுமார் 850 சீவல் தொழிலாளர் கலந்துகொண்டனர். இச்சங்கத்தில் சேருவதற்கு சீவல் தொழிலாளர் பெரும் ஆதரவு காட்டினார்கள்.

167 சீவல் தொழிலாளர் சங்க உறுப்பினராக பதிவு செய்தாரென்றும், கூட்டத்திலேயே 1000 ரூபா வரை சேர்ந்ததென்றும் கூட்டுறவு உத்தியோகத்தர் திரு. எம். செல்வராசா தெரிவித்தார்.

கொடிகாமம் அரசினர் வித்தியாசாலை மண்டபத்தில் தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுசங்க தலைவர் திரு வி. க. சண்முகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தென்மராட்சி கிழக்கு கள் உற்பத்தி விற்பனைகூட்டுறவு சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சங்கத்தின் தொழில் பரப்பு கச்சாய் கிராமசபை, மிருசுவில்கிராமசபை வரணி கிராமசபை எல்லையாக இருக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டுறவு உத்தியோகத்தர்களான திரு எம் செல்வராசா, திரு எம் வர்த்தம்பி, பி பத்மநாதன், கொடிகாமம் கிராமசேவையாளர் திரு கே சின்னையா ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திரு கே மகேஸ்வரா கூட்டுறவு கொள்கைபற்றி உரையாற்றினார். சாவகச்சேரி கள் உற்பத்திவிற்பனை கூட்டுறவு சங்க தலைவர் திரு கே நடராசா கூட்டுறவு சங்க நன்மைகள் பற்றி விளக்கிக் கூறினார்.

இரவு 9 மணிவரை விற்பனை நடைபெறும்

— நமது நிருபர் 'யோகி' —

யாழ்ப்பாணம், திங்கள்

"வடக்கில் 108 கள்ளுத் தவறணைகளை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பாடசாலைகள் கோவில்கள் பொது ஸ்தாபனங்கள் தவிர்ந்த இடங்களில் கள்ளுத் தவறணைகளை நிறுவத் தீர்மானிப்பது நல்லது. கள்ளுத் தவறணைகளை எங்கெங்கே நிறுவலாம் என்பது பற்றிக் கள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் ஆலோசனை வழங்கலாம்."

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை நடந்த கள் உற்பத்தி விற்பனைச் சங்க உறுப்பினர் மகாநாட்டில் அரசாங்கச் செயலக உதவியாளர் திரு. கே. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இம் மகாநாட்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள், கூட்டுறவு இன்ஸ்பெக்டர்கள், கலால் பகுதி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய அரசாங்கச் செயலக உதவியாளர் திரு. கே. சண்முகலிங்கம் மேலும் கூறியதாவது: ஏப்ரல் முதலாந் திகதி வடபகுதியில் கள்ளுத் தவறணைகள் ஆரம்பமாகும். இம்மாதம் 10ந் திகதிக்கு முன் சங்கங்கள் எல்லாம் நிறுவப்பட்டு விடும் இதுவரை 20 சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இச்சங்கங்களுக்கு கட்டாயம் அலுவலகம் தேவை. தற்பொழுதுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் போதிய இடமிருந்தால் ஒரு பகுதியை இச்சங்கங்களுக்கு ஒதுக்கிக்கொடுத்தால் நல்லது இரண்டும் கூட்டுறவு முறையிலிருப்பதால் ஒரே கந்தோராக இருப்பது சிறந்

[6ம் பக்கம் தொடர்ச்சி]

வடபகுதி பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

தேச விரோத நடவடிக்கையில் ஈடுபடுவோர் கைதாவர்!

யாழ்ப்பாணம், திங்கள் சமூகவிரோத, தேசவிரோத நடவடிக்கைகளிலும் விவகாரங்களிலும் ஈடுபடுவோர் பொலிசாரால் கைதுசெய்யப்படுவர் என வடமாகாணப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடபகுதிப் பாடசாலை மாணவர்களும் இத் தேச விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனராகக் கிடைத்துள்ள தகவலை அடுத்து பொலிஸ் அதிபர் பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரங்களிலும்சரி பாடசாலை இல்லாத நேரங்களிலும் இத்தகைய செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் கைது செய்யப்படும் அபாயநிலைக்கு ஆளாவார்கள் என எச்சரிக்கை செய்துள்ளார்.

இது குறித்து வடபிராந்தியக் கல்வி அதிபருக்கும் பொலிஸ் அதிபர் அறிவித்துள்ளார்: பள்ளிக்கூட மாணவர்களின் பாதுகாப்பு நலன்களைக் குறித்தே பொலிசார் இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் தவறான பிரச்சாரம் செய்து அவர்களை நாசவேலைக்குத் தூண்டுவோர் பற்றி எச்சரிக்கையாய் இருப்பதுடன் அவர்கள் சம்பந்தமான தகவல்களை பொலிசாருக்கு உடனுக்குடன் தெரியப்படுத்துமாறும் பாடசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும் பொலிஸ் அதிபர் வேண்டியுள்ளார்.

பயனியர்-10 12 லட்சம் மைல் தூரத்தில்!

கெனடிமுனை, மார்ச் 5 வியாழன் கிரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் அமெரிக்காவின் ஆளில்லாத விண்வெளிக்கலம் 12 லட்சத்து 50 ஆயிரம் மைல் தூரத்தை இன்று கடந்து விட்டது. பயனியர்-10 என்ற இக் கலம் சென்ற புதன்கிழமை அனுப்பப்பட்டது. சரியான பாதையில் பயனியர் சென்று கொண்டிருப்பதாகவும் வியாழனை அண்மிக்க 21 மாதகாலம் பிடிக்குமென்றும் கெனடிமுனைத்தளம் அறிவிக்கிறது.

தனியார் கூப்பன் கடைகளுக்கும்

சகல சாமான்களும் வழங்க வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்கள் "உத்தரவு பெற்ற அரிசி உப உணவு விநியோகஸ்தர்களுக்கும், கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்குப் போன்று பாவனையாளர்களின் வசதியை முன்னிட்டுச் சகல சாமான்களும் விநியோகிக்கப்படவேண்டும். மற்றும் மக்கள் தமது கூப்பன்களைத் தாம் விரும்பும் கடைகளுக்கு மாற்றுவதற்கும் அவர்களுக்கு வசதி அளிக்கப்படவேண்டும். இப்போது தனியார் கடைக்காரரிடமிருந்து சங்கக் கடைக்கு ஒரு கூப்பனை மாற்ற அனுமதிக்கப்பட்டபோதும் சங்கக்கடையிலிருந்து தனியார் கடை

[5-ம் பக்கம் பார்க்க]

நியூ கலிங்கன்
இணைவில்
10-8-72 வரை
தினசரி மாலை 4-30
OPERATION by SHARK
தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாணப் பரிசு

நாகம்ஸ் சினிமா
காலைகளில்
தினசரி 4-30 மட்டும்
சனி ஞாயிறு 10-30
LONDON IN
THE ROW
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
மலைக்கள்ளன்

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p. m. Sat. Sunday 10-30
KILL THEM ALL AND COME BACK ALONE
தினசரி 2-00, இரவு 9 45
தேவ் ஆனந்த் - ஆஷா பரேக்
நடித்த
JAB PYAR KISISE HOTA HAI
(ஹிந்தி)
(காதலில் கட்டுண்டால்)
இசை: சங்கர் ஜெய்கிஷன்

மனோகரா [யாழ்ப்பாணம்]
தினசரி 2-30 6-30, 10-00
சனி, ஞாயிறு 10-30
கிருஷ்ணா — பாரதி
ஜெயலலிதா — ஜோதிலக்ஷ்மி
நடித்த
சிங்காரிகளுடன் ஸீ.ஐ.டி.
[தமிழ்]
இசை: கே.வி. மகாதேவன்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி
தினசரி காலை 10 30 இரவு 10-00
பட்டணத்தில் பூதம்

ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) **லிடோ**
திரைகளில்
தினசரி 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
மற்றும்
தினசரி காலை 10-00
2-00, மாலை 6-00
இரவு 9-30
கெப்பிட்டல் - பிளாஸா -
திரைகளில்
சரித்திர நாயகனின் சாதனைச் சித்திரம்!
புரட்சி நடிகரின் வெற்றிச் சித்திரம்!!
புதுமைகள் பல அடங்கிய பொற்பேழை!!!

எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவீஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
ரிக்‌ஷாக்காரன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன் டைரக்‌ஷன்: எம். கிருஷ்ணன், தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்

வரி விளம்பரம்

வைத்தியம்

சன்னைத்திய ஆலோசனை இலவசம். அரைச்சலார் நயா 150/- திறமான பத்தியக் கட்டலாம். வலிப்பிணைகள் கழட்டலாம். சிங்கப்பூர் பல்கெட்டுமிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், மேல் மாடி, பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4014

சோதிடம்

உங்களுடைய எதிர்காலக் கல்வி, காதல், கல்யாணம், தொழில் பற்றிய செய்திகளைத் திகதிகளுடன் பெறுவதற்குக் காலையில் வாருங்கள். கைரேகை பார்க்க 5/- சாதகம் பார்க்க 7/50 வ. மாணிக்கம், காவிக்கோவிலடி திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 4106

நட்சத்திரம், வயது, பூவின் பெயர், குறித்து, 15 சத முத்திரையுடன் உறையனுப்பிப் பதில் பெறவும். இலவச மனோதத்துவ ஆருடம், ஞானபண்டித வைத்திய சாலை, அதிபர் ந. சண்முகராஜா, ஜே. பீ, கொக்குவில். 4084

கல்வி

J. S. C. பரீட்சைக்கான (1) புதிய கணிதம். (2) பொதுவிஞ்ஞானம், (3) ஆங்கிலம். பிற்பகல் 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. இரவுப் போதனை நிலையம். 16, கண்டி வீதி, கண்டிக்குழி, யாழ்ப்பாணம். 4079

விசேட, சிங்கள, ஆங்கில வகுப்புக்கள். மாலை 4 மணி தொடக்கம் 8 மணிவரை கட்டணம் மாதம் ரூ. 15-00. இரவுப் போதனா நிலையம், 16, கண்டி வீதி. கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 4077

தேவை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின்சார வசதியுடன் கூடிய தனிப்பட்ட வீடு. பின்வளவு வசதியுடன் தேவை. தொடர்பு கொள்ளவும். ஓ. அண்ணாமலை, 385, காங்கேசன் துறை வீதி, யாழ்நகர். 4119

பாலர் பாடசாலை

நெல்லியடி ஞாயிறு

நெல்லியடி சன்மார்க்க சபையினரால் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலைக்கான புதியகட்டிடமொன்றை நெல்லியடி கடைகள் புளியடியில் சன்மார்க்க சபையினர் நிறுவிவருகின்றனர்.

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஸ்ரீகாந்த் - ஜெயலலிதா
நடித்த
வெண்ணிற ஆடை

யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-விஜயா
அக்கா தங்கை

சாந்தி
(சங்கானை)
இரவு 6-15, 9-30
ஞாயிறு 2-30 மெற்னி
ஜெய்சங்கர் - ராதிகா
நடித்த
புத்திசாலிகள்

பவானி
மூளாய்
தினசரி 6-15 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர் - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா

"வேறுமொழியில் இல்லாத கருத்துக்கள் தமிழில் உண்டு"

[illegible], ஞாயிறு

"வேறெந்த மொழிகளிலும் இல்லாத தத்துவத்தையும் கருத்தையும் தமிழ் எழுத்துக்களில் காணலாம்". இவ்வாறு வல்வெட்டித்துறையில் நடைபெற்ற 'வள்ளுவர்விழா" ஒன்றில் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரான திரு த நவரத்தினம் கூறினர்.

வல்வெட்டித்துறை சனசமூகநிலையத்தில், திரு ச. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது: "உலகத்தில் உள்ள உண்மைகள் அனைத்தையும், திருவள்ளுவர் தனது முதலாவது குறளிலேயே புகுத்தி அடக்கிவிட்டார். சாதாரண மக்கள் தொடக்கம், சகல மக்கள் எல்லோரையும், எப்படி வாழலாம், எப்படி வாழவேண்டும் என்ற கருத்துக்களையும் தத்துவங்களையும் தமது குறளிலே எழுதியுள்ளார்.

பண்டிதர் பரந்தாமன் பேசும்போது கூறியதாவது: "கிரேக்க நாட்டில் பல தத்துவஞானிகள் தோன்றினர்கள். அதேபோல் தமிழ் நாட்டிலும் இருவர் தோன்றினர்கள் ஒருவர் தொல்காப்பியனார். மற்றவர் திருவள்ளுவர் இவர் பாடிய குறளிலே ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒவ்வொன்று வீதம் நூற்றி முப்பத்து மூன்று அதிகாரத்திற்கும் நூற்றி முப்பத்து மூன்று டாக்டர் பட்டங்கள் கொடுக்கவேண்டும். திரு மாணிக்கராசா பேசும்போது "இந்த உலகில் பண்பாட்டில் சிறந்தது திருக்குறள் ஒன்றுதான்' என்று கூறினர். மற்றும் பலர்பேசினர்கள்.

……

விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலுள்ள 22 சிறி 5000 தொடர் இலக்கம் கொண்ட (L.D2) டீசல்வான் விற்பனைக்குண்டு. பார்வையிட விரும்புவோர் ஈழநாடு முன்பாக உள்ள (எம். சீ, வி, அன்சன்) உடன் தொடர்பு கொள்ளவும். 4124

சி. என். 512 இலக்க A 40 கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு S. S. சர்மா, கோப்பாய் மடத்து சந்தி. 4127

பரிதாபி வீட்டு ஆயர்பாடி இராசிப்பலன்கள் விற்பனையாகின்றன விலை ரூபா 1/50 கிடைக்குமிடங்கள்: எஸ். கிருஷ்ணசாமி, யாழ்ப்பாணம். தமிழ்ப்பண்ணை, தம்பித்துரை அன் சன்ஸ், லேக்கவுஸ், விமலா ஸ்ரோஸ், [illegible], தெல்லிப்பழை. 4103

நல்ல பழக்க வழக்கமுள்ள வளர்ந்த அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு இனவிருத்திக்காக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன் 15, மனர் மகள் வீதி. அரியாலை. 4058

மருந்து கலவையாளர் பயிற்சிக்குரிய விண்ணப்பப் படிவங்களும், தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் விண்ணப்பப் படிவங்களும் எங்களிடம் கிடைக்கும். ஒரு படிவம் ரூபா 1/- யூனைட்டெட் இன்ஸ்டிடியூற் நெல்லியடி, கரவெட்டி. 4114

கொக்குவில் கிழக்கு வேதக் கோவில் ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. தம்பிராஜா, 9, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, கண்டிக்குளி. 4118

இராசாவின் தோட்டம் வீதியில் மூன்று பரப்புக் காணி கட்டிடம் அமைப்பதற்கேற்ற வகையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு போகானந்தம், 180/1, கண்டி வீதி அரியாலை. 4123

25 ஸ்ரீ 5933 ராக்டர் பெட்டி ரிக்கலுடன் புதிய பற்றறி ரயர் பீஸ்ரன்களுடன் விற்பனைக்கு உண்டு. [illegible] நல்ல நிலையிலுள்ளது. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: பாலராசா கடை, 3-ம் வாய்க்கால், பரந்தன். 4121

விக்டோறியா பாலத்தில் அட்டகாசம்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு விக்டோறியாப் பாலத்தில் இரவு வேளைகளில் சென்றுவரும் கார், நடை, சைக்கிள் மாட்டு வண்டிப் பிரயாணிகள் காடையர்களின் துன்புறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர்கள்.

அதிகாலையில் கொழும்பு நோக்கி வந்து கொண்டிருக்கும் இப் பிரயாணிகள் தமது பொருட்களையும் பணத்தையும் பறிகொடுக்கிறார்கள். இவை திட்டமிட்டபடி சில காடையர்களின் செயல்கள் எனத் தெரிகின்றது. [ச]

இல்லப் போட்டி

புத்தளம், ஞாயிறு

முஸ்லிம் புத்தாண்டு (மூஹர்ரம்) விழாவையொட்டி புத்தளம் சாஹிரா மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையில் இல்லப் போட்டி ஒன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இப்போட்டிக்குப் சமால், இக்பால், ஜின்னா ஆகிய இல்லங்கள் பங்குபற்றின. இல்லங்களுக்கிடையில் கிராத் ஓதல் பேச்சுப் போட்டி, இஸ்லாமிய கீதம் ஆகியவை கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவினர்களுக்கிடையில் நடைபெற்றன.

இப்போட்டியில் ஜின்னா இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது.

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
லீலா நாராயணன்
ஜெயகாந்த் தேவிகா
நடித்த
குத்து விளக்கு

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள நாடுகள்

பிரச்னைகளை நேரடியாகப் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும்

ஷேக்.--கோஸிஜின் கூட்டறிக்கை

மொஸ்கோ, மார்ச் 5

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள நாடுகள் தமக்குள்ளிருக்கும் பிரச்னைகளை அந்நிய தலையீடு இன்றியே நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும் என்று சோவியத் பிரதம மந்திரி திரு. கோஸிஜினும் பங்களாதேஷ் பிரதம மந்திரி ஷேக் முஜிபர் ரஹ்மானும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் சோவியத் யூனியனில் மேற்கொண்ட விஜயம் முடிவுற்றதை அடுத்து இக்கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்டுள்ள உண்மை நிலையை இங்குள்ள நாடுகள் உணர்ந்தாகவேண்டும். தங்களுக்கிடையிலான பிரச்னைகளை வெளியாரின் தலையீடு இல்லாமல் தாங்களே பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று இருதலைவர்களும் தமது அறிக்கையில் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

பங்களாதேஷ் ஐ. நா. வில் சேர்வதற்கு சோவியத் யூனியன் உதவி புரியும் என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் பொருளாதார வளர்ச்சிக்கு சோவியத் யூனியன் தன்னாலான சகல உதவிகளையும் செய்யும் என்று இக்கூட்டறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் எண்ணெய் வளங்களையும் நிலவாயுக்களையும் கண்டுபிடிக்க சோவியத்நாடு பெரும் உதவிகளை வழங்கவும் இணங்கியிருக்கின்றது.

······

லண்டனில் மோல்டா பிரதமர்

லண்டன், மார்ச் 5

மோல்டா பிரதம மந்திரி திரு. மின்டோவ் லண்டன் வந்திருக்கிறார்.

மோல்டாவில் பிரிட்டிஷ் துருப்புகள் தொடர்ந்து இருப்பது சம்பந்தமாக பிரிட்டிஷ் மந்திரி பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் காரிங்டன் பிரபுவுடனும் பிரதம மந்திரி ஹீத்துடனும் அவர் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

பாக். - பங்ளாதேஷுக்கு இஸ்லாமிய தூதுகோஷ்டி

பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷுக்கும் இஸ்லாமிய நாடுகளின் தூதுகோஷ்டியொன்று செல்லவிருக்கின்றது.

சவூதி அரேபியாவில் ஜித்தா நகரில் நடைபெற்ற இஸ்லாமிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டில் இவ்விரு நாடுகளுக்கும் தூதுகோஷ்டியொன்றை அனுப்புவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இத்தூதுக் கோஷ்டியில் 6 உறுப்பினர்கள் இருப்பார்கள். பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷிற்குமிடையிலான பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இந்தத் தூதுகோஷ்டி உதவிபுரியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

31 இஸ்லாமிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் மேற்படி கூட்டத்தில் இஸ்லாமிய நாடுகளுக்கிடையிலான பிரச்னைகள் பலவும் ஆராயப்பட்டன.

டிக்காகான் நியமனம் பற்றி யு. எஸ். பத்திரிகை

பாகிஸ்தானின் ராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் டிக்காகான் நியமிக்கப்பட்டிருப்பது குறித்து நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை அபிப்பிராயம் வெளியிட்டிருக்கின்றது.

கடுமையான போக்கையுடையவர்கள் பாகிஸ்தான் ராணுவத் தலைமைப் பீடத்தில் இடம் பெற்றிருப்பது எல்லைப்பகுதியில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு நிலைமைகளைச் சமாளிப்பதற்காக ஜனாதிபதி பூட்டோ எடுத்துள்ள நடவடிக்கையாக இருக்கலாம் என கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஜெனரல் டிக்காகான் நியமனம் காரணமாக ஜனாதிபதி பூட்டோ, ஷேக் முஜிபுர் ரஹ்மானுடன் உறவு கொள்ள எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்காமல் போகலாம் என்றும் கருதப்படுகின்றது. ஜெனரல் டிக்காகான் பங்களாதேஷில் முன்பு பாகிஸ்தான் ராணுவ சட்ட நிர்வாகியாக இருந்தவர்.

இங்கு தே. எண்ணைவாங்க பங்ளாதேஷ் விருப்பம்

கொழும்பு, ஞாயிறு

பங்களாதேஷ் அரசு 147,000 தொன் தேங்காய் எண்ணை சப்ளை செய்யும்படி இலங்கையிடம் கேட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்த எண்ணையை இந்தியாவிடமே பங்களாதேஷ் பெற்றுக்கொள்ள விரும்பியபோதிலும் தற்போது 20,000 தொன் வரையில் சப்ளை செய்யமுடியும் என்று இந்தியா அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்த நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வர்த்தக வட்டாரங்கள் விரும்புகின்றன. அரசாங்கம் இந்த வர்த்தகத்தில் நேரடியாகத் தலையிட விரும்பாவிடில் தனிப்பட்டமுறையில் தங்களை அனுமதிக்கும்படி இலங்கை வர்த்தகர்கள் கோருகிறார்களாம். (ச)

மீண்டுமவேலை

மாவிட்டபுரம், ஞாயிறு

வலி-வடக்கு காரியாதிகாரி பிரிவில் ஏற்கனவே வேலைநீக்கம் செய்யப்பட்ட கிராம சேவையாளர் மீண்டும் இம்மாதம் முதல் வேலைக்கு அழைக்கப்பட்டுள்ளார். பலாலி கிராமசேவையாளராக இருந்த திரு. என். சுதிரேசன் தற்காலிகவேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

தற்பொழுது வலி-வடக்கு காரியாதிகாரி காரியாலயத்தில் கடமையாற்றும் இவர் விரைவில் ஒரு பகுதிக்கு நியமிக்கப்படவிருக்கிறார்.

······

விருந்துபசாரம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடசாலை க. பொ. த. உயர்தரப் பிரிவு மாணவிகளது விருந்துபசார வைபவம் கடந்த வியாழனன்று நடைபெற்றது. சம்பத்திரிசியார் கல்லூரி க. பொ. த. உயர்தரப்பிரிவு மாணவர்களும் ஆசிரியர்களும் விருந்தில் கலந்துகொண்டனர். யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடசாலை மண்டபத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

இந்த வருடம் ஓய்வு பெறுவோர்

கோட்டை, ஞாயிறு

55 வயதில் ஓய்வு என்ற அடிப்படையில் இந்த வருடம் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஏ. சி. டெப் மே மாதம் ஓய்வுபெறுகிறார். 8 பொலிஸ் சுப்பிரின்டென்டன்கள் 11 உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்டன்கள் ஓய்வுபெறுகின்றனர்.

பொலிஸ் பகுதியில் கடமைபுரியும் மற்றும் 43 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், 21 சப் இன்ஸ்பெக்டர்கள், 13 சார்ஜன்டுகள், 4 கான்ஸ்டபிள்கள் ஆகியோரும் ஓய்வுபெறுகின்றனர். இந்த வருடம் ஓய்வுபெறுவோர் தொகை மற்ற வருடங்களைவிட அதிகமாயுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

······

91 பிள்ளைகளுக்கு ஒரே ஒரு ஆசிரியை

சுழிபுரம் ஞாயிறு

சுழிபுரம் திருவடி நிலைத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றுவரும் 91 மாணவர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியை மட்டுமே கடமையாற்றி வருகின்றார். ஏற்கனவே கடமையாற்றிய இரு ஆசிரியர்கள் கிளிநொச்சி காரைநகர் ஆகிய இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். மிகுதியாகவுள்ள ஓர் ஆசிரியை மட்டுமே சகல பொறுப்புகளையும் ஏற்று அங்கு கடமையாற்றிவருகின்றார்.

சோலைவரி

நெல்லியடி ஞாயிறு

இவ்வருடம் முதல் புலோலிக் கிராமசபை சோலைவரி அறவிட்டு வருகிறது. இக்கிராம எல்லைக்குட்பட்ட மின்சார விநியோகத்தை இக்கிராமசபை பொறுப்பேற்றிருக்கிறது. இதனை முன்னிட்டே சோலைவரி அறவிடப்படுகிறது.

காவிரி-கங்கை இணைப்பு: பூர்வாங்க ஆய்வு பூர்த்தி

விஜயவாடா, மார்ச் 5

காவிரி ஆற்றை கங்கையுடன் இணைப்பதற்கான வாரிய திட்டம்பற்றிய பூர்வாங்க ஆய்வுகள் முடிவடைந்துள்ளன.

இந்திய நீர்ப்பாசன மந்திரி டாக்டர் கே. எல். ராவ் இத்தகவலை விஜயவாடாவில் வெளியிட்டார்.

வடக்கேயுள்ள கங்கைநதியுடன் தெற்கேயுள்ள காவிரியாற்றை இணைப்பதின் மூலம் இந்தியாவில் வெள்ளப்பெருக்கைத் தடுக்கவும் வரண்ட பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனம் ஏற்படுத்தவும் இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இத் திட்டம் பற்றிய பூர்வாங்க ஆய்வுகள் முடிவடைந்துவிட்டதாகவும் விசேஷ ஆய்வு ஒன்றை நடத்துவதற்கு நிபுணர் குழுவொன்றை அனுப்பும்படி தாம் ஐ. நா. வைக் கேட்டிருப்பதாகவும் திரு. ராவ் தெரிவித்தார்.

······

"எத்தொழிலைச் செய்யவும் தயாராகுங்கள்"

மாவிட்டபுரம், ஞாயிறு

"இன்று நாடு பொருளாதார இக்கட்டிலிருக்கின்றது. இத்துடன் வாலிபர்களும் வேலையில்லாது இருக்கின்றனர். ஆதலால் அரசின் உதவியுடன் இளைஞர்கள் எத்தத் தொழிலிலும் ஈடுபடத் தயாராகவேண்டும்" என்று மாவை இந்துவாலிபர் முன்னேற்றச்சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் தெல்லிப்பழை கிராமசபைத் தலைவர் திரு. சிதம்பரநாதன் கூறினார்.

தெல்லிப்பழை இந்துவாலிபர் முன்னேற்றச்சங்க அரங்கில் நடந்த இவ்விழாவில் புலவர் ம. பார்வதிநாதசிவம் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர்.

······

வன்னேரிக் குளத்தில் நெற்களஞ்சியங்கள்

துணுக்காய், ஞாயிறு

"நானூறு விவசாயிகள் வசிக்கும் வன்னேரிக்குளத்தில் 15000 ரூபா செலவில் இரு நெற்களஞ்சியங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்னும் சில வாரங்களுள் மேலும் இரு நெற்களஞ்சியங்கள் திறந்துவைக்கப்படவுள்ளன. ஆகவே இப்பகுதி புறக்கணிக்கப்படுகிறது என்ற குறை நிவர்த்தியாகியுள்ளது" என்று வன்னேரிக்குளத்தில் இரு நெற்களஞ்சியங்களைத் திறந்துவைத்து உரையாற்றிய பகுதிக் காரியாதிகாரி திரு. க. பரமேஸ்வரன் தெரிவித்தார். துணுக்காய் ப. நோ. கூ. சங்க புனருத்தாரணத் திட்டத்தின்கீழும் ஏகபோக நெற்கொள்வனவு ஒழுங்குகளின் கீழும் இக்களஞ்சியங்கள் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. துணுக்காய் காரியாதிகாரியும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

7 மைல்கள் நடக்கவேண்டும்

யாழ்ப்பாணம் திங்கள்

முத்தையன்கட்டு வலதுகரை வாலிபர் குடியேற்றத்திட்ட விவசாயிகள் போக்குவரத்துக் கஷ்டம் காரணமாக கவலை கொண்டுள்ளனர். ஒட்டிசுட்டானிலிருந்து இவர்கள் தமது கமத்துக்குச் செல்வதற்கு சுமார் ஏழுமைல் நடக்கவேண்டியிருப்பதால் வழியில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியுள்ளதாகப் புகார் கூறுகின்றனர்.

ரயில்பாதையில் கற்கள்

கொழும்பு, ஞாயிறு

கெக்கிராவைக்கு அண்மையிலுள்ள இஹலகம என்ற இடத்தில் புகையிரதப் பாதைகளில் கற்களை வைத்துள்ளார்கள். இதனால் அவ்வழியே சென்றுகொண்டிருந்த சரக்குவண்டி சிறு சேதத்திற்குள்ளானது. சம்பந்தப்பட்டவர்களைப் பிடிப்பதற்காக கெக்கிராவ பொலிசார் விசாரணை நடத்திவருகின்றார்கள். புகையிரதப்பாதைகளில் சந்தேகத்திற்கிடமாகத் திரிபவர்கள் மீது பொலிசார் தீவிர கண்காணிப்பு செய்து வருகின்றார்கள். (ச)

உள்ளூரில் புதிய உற்பத்திகள்

பருத்தித்துறை, ஞாயிறு

புத்தூரில் இயங்கிவரும் வித்தியா சோப் கைத்தொழிற்சாலையில் பல்வேறு ரகச் சவர்க்காரங்கள் சந்தனக் குச்சிகள், கர்ப்பூரம்; பற்பொடிவகைகள் ஆகியன உற்பத்திசெய்ய ஆரம்பித்துள்ளனர். இன்னும் சில ஆண்டுகளில் இத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டதும் இவ்வித பொருட்களில் வடபகுதி தன்னிறைவுகாண முடியுமென்று நிர்வாகிகளுள் ஒருவரான திருமதி எஸ். ஜெகநாதன் கூறுகிறார்.

······

புலோலியில் பனங்கட்டித் தொழிற்சாலை

புலோலி, ஞாயிறு

புலோலிப் பகுதியைச் சேர்ந்த கொத்திபலத்தை என்னுமிடத்தில் பனங்கட்டித் தொழிற்சாலை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கிராம அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளது. பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் இத்தொழிற்சாலைக்கு வேண்டிய உபகரணங்களை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்துள்ளார்.

······

விபத்து

நெல்லியடி ஞாயிறு

அல்வாய் தெற்கு தெருமூடி மடத்திற்கருகில் சைக்கிளும் டிராக்டரும் மோதுண்டன. சைக்கிளில் வந்தவர் தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டார். சைக்கிள் பலத்த சேதத்துக்குள்ளானது.

"இசைக்கலை மக்களை விழிப்புணர்ச்சி பெறச்செய்யும்"

சாவகச்சேரி எம். பி. உரை

மீசாலை, ஞாயிறு

இசைக்கலை பக்தியையும் சன்மார்க்கத்தையும் வளர்ப்பது மாத்திரமன்றி மக்களை விழிப்புணர்ச்சி பெறச்செய்து அடிமை விலங்கிலிருந்தும் மீட்டுக்கொள்கின்றது. ஆகவே கிராமங்கள்தோறும் தேசங்கள்தோறும் கலைவிழாக்கள் இசைவிழாக்கள் அமோகமாக நடைபெறவேண்டும்.

சாவகச்சேரியில் நடைபெற்ற இசைவிழாவில் முதலாவது நாள் நிகழ்ச்சியின்போது சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினார்.

தென்மராட்சி இசைக்கலை மன்றத்தினரால் சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோவில் முன்பாக அமைக்கப்பட்ட பந்தலில் தொடர்ந்து 5 நாட்கள் இசைவிழா நடாத்தப்பட்டது.

நல்லூர் திருஞானசம்பந்த ஆதீன அமைப்பாளர் முத்தமிழ்மணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இசையும் இறைவனும் எனும் பொருள்பற்றிப் பேசும்போது இசைப்பக்தியையும் சன்மார்க்கத்தையும் வளரச்செய்து ஆண்டவனுக்கு இசைவல்லார் மீது நிரம்பிய அன்பு வளரச்செய்யும். உண்மையான இசைஞானிக்கு இறைவனே பிரத்தியேகமாக வந்து இடர்தீர்ப்பாரென்று பாணபத்திரன் சம்பவத்தை எடுத்துக்கூறி இனிய சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார்.

அளவெட்டியூர் திரு பாலகிருஷ்ணனின் நாதஸ்வரக் கச்சேரி செல்வி சரோஜினிதேவி முருகேசு, செல்வி அரதாமணி வேலாயுதபிள்ளை திரு வே. நடேசன் குழுவினரின் வன்னிசை திரு எஸ். கணபதிப்பிள்ளை என்போரின் இசைக்கச்சேரியும் திரு கே. என். கணபதிப்பிள்ளையின் வில்லுப்பாட்டும் நடைபெற்றது.

நாட்டின் செல்வங்களில் உன்னதமானது இசைச்செல்வம்

மீசாலை, ஞாயிறு

'நம்நாட்டின் செல்வங்களில் மிக உன்னதமானது இசைச்செல்வம். இத்தகைய செல்வத்தை வாரிவழங்கும் இசைக்கலை மன்றத்துக்கு ஆதரவு கொடுத்து அதற்கென ஒரு மணிமண்டபமும் நிறுவ பொதுமக்கள் உதவி கொடுங்கள்.'

சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் நடந்த தென்மராட்சி இசைக்கலை மன்றத்தின் இசைவிழாவின் 4-ம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி உரைவழங்கிய வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். சிவஞானம் கூறினார்.

நற்றமிழ்வளர்த்த நாயன்மார் நால்வருக்கும் இம்மன்றத்தினர் விழாவெடுத்தால் அவர்கள் இசைக்குச் செய்யும் தொண்டு இன்னும் பரிமளிக்கும்' என்று 'தமிழோடிசைபாடல்' என்னும் பொருள்பற்றி உரையாற்றிய செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

செல்விகள் நளாயினி செல்லத்துரை, பவளாட்சி சரவணமுத்து, கௌரி தம்பிராசா, செல்வி இந்திரா கணபதிப்பிள்ளை, சரோஜினி தபாலசிங்கம் திரு பொன் சுந்தரலிங்கம் என்போரின் இசைவிருந்தும் திரு ஏ. என். இராமநாதன் தயாரித்த இராமநாதன் இசைக்கல்லூரி மாணவர்களின் தாளவாத்தியக் கச்சேரியும் இடம்பெற்றன.

ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள்

17 வருஷம் இசைக்குத் தொண்டுசெய்துவரும் இம்மன்றம் தனது 20வது வருட இசைவிழாவின் போதாவது தனக்கென சொந்தம் பாராட்டும் ஒரு மண்டபத்தில் இசைவிழா நடத்தும் வகையில் பொதுமக்கள் உதவி அளிக்க வேண்டியதோடு சங்கீதத்தையேதமது ஜீவனோபாயமாகக் கையாண்டுவரும் சங்கீத வித்துவான்களுக்கு சன்மானமும் வழங்கும் வகையில் கட்டணம் செலுத்தி இசைவிழாவை நடாத்த உங்கள் பரிபூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

சங்கீத வித்துவான் திரு ராம் குமாரசாமி 5-வது நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நிகழ்த்திய தலைமையுரையில் இவ்வாறு கூறினார்.

இம்மன்றவிழாவில் கலந்து அருளுரை வழங்கிய ஜகத்

குரு ஸ்ரீ சிவானந்தமுனீஸ்வர சுவாமி பேசும்போது 'நாம் செய்யும் புண்ணியங்களுக்கு அநுபவிக்கும் பிரதிபலன் நாட் செல்லச் செல்லத்தான் கிடைக்கும் ஆனால் ஒருவன் மெய் மறந்து இசையில் லயித்துப் பாடினால் அவனுக்கு உடனே அதன்பலன் கிடைக்கும்' என்று கூறினார். செல்வி கமலாதேவி சிதம்பரப்பிள்ளை செல்வன் எஸ். சண்முகராகவன், திரு கே. ஆர் நடராசா, செல்வி அருணாசலம் குழுவினர்களும் இசைவிருந்தளித்தனர். 'பரிகொலைகாரன் என்ற' நாடகமும் நடைபெற்றது.

மக்களின் ஆதரவுவேண்டும்

'உயர்தரமான சங்கீதத்தை நாம் கேட்கும் சந்தர்ப்பம் உண்டாகும் வகையில் தென்மராட்சி இசைக்கலை மன்றத்தினர் இசைவிழா நடத்த பொதுமக்கள் நல ஆதரவு வழங்கவேண்டும். நல்லசங்கீதம் கேட்கும்போதுதான் எங்கள் உள்ளம் பரிசுத்தநிலையடைந்து ஆண்டவனுடன் இசையும்".

தென்மராட்சி காரியாதிகாரி திரு இ. சிதம்பரப்பிள்ளை 2வது நாள் இசைவிழாவில் தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினார்: திருமதி. மங்கையர்க்கரசி குமாரசாமி, இசைக்கலை மன்ற மாணவிகள், திரு வே. குமாரசாமி திருமதி பூமணி இராசரத்தினம், திரு. பரம்தில்லைராசா என்போர் இசைவிருந்தளித்தனர்.

'மனிதனின் முக்கிய எதிரி'

சுழிபுரம், ஞாயிறு

"உயிருக்கு உலைவைக்கும் காசநோயை ஒழிக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். இது மனிதனின் முக்கிய எதிரியாகும். ஆகவே எக்ஸ்ரே படம் எடுத்துப் பார்த்து இதற்கான சிகிச்சையை உடன் செய்யவேண்டும்". இவ்வாறு க்ஷயரோக தடுப்புச்சங்க வலி. மேற்குக்கிளைச் செயலாள திரு உ. தேவகடாட்சம் விக்ரோறியாக் கல்லூரி விஞ்ஞானக் கழக பேரவையில் பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில் "இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் மறைந்திருந்தால் மக்கள் காட்டிக்கொடுக்க முன்வரவேண்டும். இதனால் நோயாளிகள் சுகமடையவும் நாட்டை விட்டு இந்நோயை விரட்டவும் முடியும்" என்றார். செல்வன் அ. சுகுமார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இக் கல்லூரி அதிபர் திரு எஸ். சிவஞானமும் பேசினார்.

புதிய சமாதான நீதவான்

திரு. சி. வே. எட்வேட் நவரத்தினசிங்கத்தை யாழ். மாவட்ட சமாதான நீதவானாக அரசு நியமித்துள்ளது.

மண்டைதீவைச் சேர்ந்த முன்னாள் அதிபர் திரு. சின்னையா வேதநாயகம் எட்வேட் நவரத்தினசிங்கம் ஒரு பண்புமிக்க சமூகத்தொண்டராவார். இவர் உடுப்பிட்டி தலைமை ஆசிரியர் சின்னையாவின் புதல்வரும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி மேரி சின்னையாவின் சகோதரருமாவர். யாழ்ப்பாணக் கல்லூரி இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி, நீர்கொழும்பு மாரிஸ் ரெல்லா கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவருமாகிய இவர் சிறந்த உதைபந்தாட்ட வீரராகவிளங்கினார். ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி, பண்டாரவளை, சென். யோசப் கல்லூரி இளவாலைசென்ஹென்றீஸ் கல்லூரி ஆகியவற்றில் பதினைந்து ஆண்டுகள் ஆசிரியப்பணியாற்றிய பின் உயர்த்தப்பட்ட ஆங்கில ஆசிரியராகி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் முதல் அதிபரானார். நெடுந்தீவு மகாவித்தியாலயம் பலதுறைகளில் சிறப்படைய அவர் 18 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராக அயராது உழைத்தார். இவரது சேவை நெடுந்தீவின் வரலாற்றில் புதிய அபிவிருத்தியைத் தொடக்கிவைத்தது குறிப்பிடத்தக்கது.

ஏழாலை மகாவித்தியாலயம், மாதகல் சென்யோசப் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராயிருந்த அரும்பணியாற்றினார். 1968ல் ஓய்வு பெற்ற இவரது கல்விச் சேவையைப் பாராட்டி மாதகல் சென் யோசப் மகாவித்தியாலய திறந்தவெளி அரங்கிற்கு இவரது பெயரைச்சூட்டி நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா திறந்துவைத்தது குறிப்பிடப்படத்தக்கது.

கடந்த மூன்று ஆண்டுகளாகப் பண்டத்தரிப்புப் பட்டினசபையின் உறுப்பினராக இவர் பணிபுரிந்து வருகிறார்.

—'அபிமானி'

மந்திரிக்கு கோரிக்கை

புத்தளம், ஞாயிறு

கல்பிட்டி அல் அக்ஸா மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம் வித்தியாலயத்தில் நிறுவப்பட விருக்கும் கட்டடத்திற்கான அடிக்கல்லை கல்வி அமைச்சர் கலாநிதி ஜனாப் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் வருகைதந்து நடுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

'நமது பொருளாதாரத்தை விருத்திசெய்யத்தவறினோம்'

அராலி, ஞாயிறு

"இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்து மற்றைய மாவட்டங்களில் காடுகளை அழித்துக் குடியேறுமாறு யாழ்ப்பாண மக்களைக் கேட்டிருந்தது இவ்வாறு குடியேறி நமது பொருளாதாரத்தை விருத்திசெய்ய நாம் தவறிவிட்டோம்"

அராலி தெற்கு கிழக்குப் பயிர்ச்செய்கைக்குழு அலுவலகத்தில் நடந்த கருத்தரங்கில் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்

வலி-மேற்குக் காரியாதிகாரி திரு. மா. நடராசா தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் திரு மாணிக்கவாசகர் மேலும் கூறியதாவது:-

"எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் கைத்தொழில் அமைக்க முன்வருவோருக்கு இயந்திர சாதனங்கள் இறக்குமதிசெய்ய சுங்கவரி ஐந்து ஆண்டுகளுக்கு வருமானவரி நீக்கஞ்செய்வதாக அரசாங்கம் அறிவித்தது. இதையும் நாம் நழுவவிட்டோம். தற்போது பிராந்திய அபிவிருத்திச் சபைகள் மூலம் ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிராந்தியத்திற்கும் இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையேனும் கைவிடாமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எதிர்காலம் வாலிபர்களுக்கு மிகவும் மோசமாக அமையலாம்.

வர்த்தக சேவையென்று நம்பியிராமல் நம்முன்னோர் போல விவசாயம், விவசாயக் கைத்தொழில்களில் நாம் நாட்டஞ் செலுத்த வேண்டும்"

"சணல் பருத்தி, முத்தாமணக்கு, மரவள்ளி அவரை போன்ற காசுப் பயிர்களைத் தரிசுநிலங்களில் வெற்றிகரமாக விளைவிக்கலாம். இப்பயிரினங்களோடு சம்பந்தப்பட்ட கைத்தொழில்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யாத இவ் உபகரணங்களோடு ஆரம்பிக்கலாம். இக்கைத்தொழில்களுக்குப் பெரிய திட்டங்களோ தொழில்நுட்ப வல்லுனரின் ஆலோசனைகளோ தேவையில்லை"

இன்றைய பலன்

மாசிமாதம் 23-ந் திகதி
(6-3-72)

மேஷம்- மனம் நிறைந்த வாழ்வு இன்று கிடைக்கும். அறவழிகளில் நாட்டம் பிறக்கும். இரக்க சிந்தையுடன் இறை நம்பிக்கையும் பிறக்கும்

ரிஷபம்- தாரதோஷ வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். அவதானம் வேண்டும்

மிதுனம்- குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளால் பெருமைக்கு இடமுண்டு.

கடகம்- அவசர முடிவும் அதன் வழித்தன்மையும் உண்டு. சிலருக்கு ஆயுத பீடைகளும் தாக்கும். மௌனம் விரும்பத்தக்கது

சிம்மம்- எதிர்பாராத திருப்பங்கள் இன்று வாழ்க்கையில் புதிய மாற்றங்களை உருவாக்கலாம். கண்ணியமான தினம்

கன்னி- பயன்தரும் பிரயாணமொன்று இன்று மேற்கொள்ளப்படலாம். பழைய நினைவுகள் தலைதூக்கும். திருப்தியான தினம்

துலாம்- சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். பிற வழிச்சுகம் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு.

விருச்சிகம்- எதிர்பாராத வகையில் செலவுகள் விரயமாகும். கொடுக்கல் வாங்கல்களால் பிணக்குகள் ஏற்படும்

தனுசு- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்குப் பதவி உயர்வும் ஏற்படலாம். வெளியிடத் தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெருகும்

மகரம்- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும் சுற்றுடலின் மூலம் பொருள் விரயத்திற்கும் இடமுண்டு.

கும்பம்- எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசர முடிவு ஆபத்தில் சிக்கவைக்கும். எதையும் நிதானமும் இதமும் வேண்டும்.

மீனம்- மாணவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

……

'மண்டபம் வேண்டும்'

மீசாலை, ஞாயிறு

"தென்மராட்சி இசைக்கலைமன்ற நிர்வாகிகள் இசைக்கலையை நாம் கேட்டு அனுபவிக்கும் வகையில் செய்துவரும் தொண்டு மிகவும் மகத்துவமானது இத்தொண்டு மேலும் விருத்தியடைந்து மன்றத்துக்கென ஒரு தனிமண்டபமும் அமைக்க பொதுமக்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் இதுவே இவர்கள் செய்யும் தொண்டிற்குப் பிரதியுபகாரமாகும்."

வழக்கறிஞர் திரு. கே. ஞானசந்திரன் 3வது நாள் நிகழ்ச்சிக்குத் தலைமையுரை வழங்கியபோது கூறினார்.

இராமநாதன் இசைக்கல்லூரி மாணவிகள், செல்வி சௌந்தரவல்லி உமாமகேஸ்வரன், யாழ். ரசிகரஞ்சன சபா மாணவர்கள் திரு வி. கே. கருணாகரன் என்போர் இசைவிருந்தளித்தனர் யாழ் கலை மன்றத்தின் சார்பில் திருமதி திரிபுரசுந்தரி யோகச்செல்வம் தயாரித்த நடன நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

……

கைப்பந்தாட்ட நிலையங்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

புத்தூர் கிராமசபையைச் சேர்ந்த 13ம் வட்டாரத்தில் கிராமசபையால் நன்கொடையளிக்கப்பட்ட இடத்தில் மேற்படி கிராமச்சபைத் தலைவர் திரு. மு. திருநாவுக்கரசு கலைமதி சனசமூக நிலையத்தினரிடம் ஒரு பந்தையும் வலையையும் அன்பளிப்புச் செய்து விளையாட்டை ஆரம்பித்து வைத்தார், நிலையத்தலைவர் திரு ம. கனகு நன்றி தெரிவித்தார்.

இவ்வாறு புத்தூர்கிராமச் சபையைச் சேர்ந்த வாதரவத்தை இளைஞர்களுக்கும் திரு. திருநாவுக்கரசு ஒருபந்தும் வலையும் அன்பளிப்பாக அவ்வட்டாரக் கிராமச்சபை உறுப்பினர் திரு. இ. கந்தசாமியிடம் கையளித்து அங்கும் ஒரு கைப்பந்தாட்ட நிலையத்தைத் திறந்து வைத்தார்.

"இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது"

பருத்தித்துறை ஞாயிறு

"வடபகுதியிற் பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டபின்னர் இப்பகுதி விவசாயிகளின் ஊக்கத்தையும், உற்பத்திச் சாதனையையும் பாராட்டாதிருக்கமுடியாது. நீர்ப்பாசனமும், விஞ்ஞான ரீதியான உதவிகளும் அவர்களுக்குக் கிடைத்தால் அவர்கள் இன்னும் இரண்டு மடங்கு உற்பத்தி செய்ய முடியும். வடபகுதியைப் போல நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள விவசாயிகள் ஊக்கமெடுத்தால் உணவு இறக்குமதி பெருமளவிற்குக் குறைக்கப்படலாம்."

இவ்வாறு ஐ. நா. சபையின் ஓர் உறுப்பான உணவு விவசாய அமைப்புப் பிரதிநிதி டாக்டர் டீ. எவேட்ஸ் தமக்கும் மற்றொரு பிரதிநிதியான டாக்டர் ஜெனர்வைப்பவுக்கும் வடமராட்சிப் பயிர்ச் செய்கைக் குழுவினர் அளித்த வரவேற்பில் பேசுகையில் கூறினார்.

வடபகுதி விவசாய உபாதிகாரியான திரு. சோ. தி. சம்பந்தமூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பூ. சப்புக்கொடி தான் பேசுகையில் தமது நிறுவனம் வடபகுதியின் விவசாய அபிவிருத்திக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கும் எனக்கூறினார்.

வடமாகாண நீரியல் உயிரியல் ஆராய்ச்சி நிலையச்செயலாளர் திரு. கே. எஸ். குலதாசன் நன்றிகூறினார்.

மயிலிட்டியில் மார்ச் 13-ல் சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், திங்கள்

மயிலிட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் மயிலை இந்து அறநெறிக்கழகத்தாரால் மகாசிவராத்திரி விழா இம்மாதம் 13-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது.

நான்கு சாமமும் விசேட பூசை, ஆராதனைகளுடன் முதற்சாமத்தில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைமையில் திரு. இ. சுந்தரலிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் சொற்பொழிவும் நடைபெறும்.

இரண்டாம் சாமத்தில் வைத்தியகலாநிதி க. சிவஞானரத்தினம் தலைமையில் செல்வி புஷ்பா செல்வநாயகம், திரு. இ. வைத்திலிங்கம் ஆகியோரின் சொற்பொழிவும், மூன்றாம் சாமத்தில் திரு. மு. வைரவப்பிள்ளை தலைமையில் காங்கேசன்துறை இளந்தமிழ் மன்றத்தாரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் திரு. கா. துரைஐயாவின் பக்திப்பாடலும் நடைபெறும்.

நான்காம் சாமத்தில் பிரம்மஸ்ரீ பாலசுந்தரக் குருக்களின் தலைமையில் பண்டிதர் . குமாரசாமி திருவாளர் த. சிவலிங்கம் இ. ந ப்பிரகாசம் ஆகியோர் சொற்பொழிவும் இட றும்

வீடு தீப்பற்றியது

யாழ்ப்பாணம், திங்கள்

தீப்பெட்டியுடன் சிறுவன் விளையாடினான். இந்த விளையாட்டு அவனது வீட்டையே தீக்கிரையாக்கியது. இச்சம்பவம் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு அணித்தாக நடைபெற்றது.

நேற்று முன்தினம் மதியானம் தாயார் சமையல் வேலையிலிருந்தபோது சிறுவன் தீக்குச்சிகளை எடுத்துப் பெட்டியில் உராசி விளையாடிக்கொண்டிருந்ததாகவும் இதனைத்தொடர்ந்து இத் தீவிபத்து ஏற்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

வீட்டிலிருந்த பொருள்கள் யாவும் தீயில் சாம்பலான போதும் அயலவரின் முயற்சியால் வீடு முற்றாகச் சாம்பலாகாமல் தடுக்கப்பட்டது. வீடு பற்றி எரிவதைக் கண்டு மயங்கிவிழுந்த வீட்டுச் சொந்தக்காரரையும் அவரது மனைவியையும் அவர்கள் காப்பாற்றினர்.

நி னம்

புரம், ஞாயிறு

சுழிபுர திருவடிநிலைத் தமிழ்க் க பாடசாலைத் தலைமை ராகக் கடமையாற்ற திரு. எஸ். சிதம்பர ளை முதலாந்தரத் தமி ப ஆசிரியர் நியமனப் உயர்வுடன் காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்துக்கு இடமாற்றஞ் செய்யப்படுகின்றார்.

இரு அலை வரிசை கொண்ட ரேடியோ
ரூ. 325/=
SONY
8R-24 MS
ஸோனி
சிற்றலை, மத்திய அலை ஆகிய வற்றுடன் மிக நேர்த்தியான ஒலி அமைப்பிற்கு, உள் அமைக்கப்பட்ட ஒலிக் கம்பம் உடையது. நான்கு டோர்ச் பாட்டரிகளில் இயங்குவது.
சீடில்ஸ் சினிரேடியோ
9-10, கன்சிஸ்ட்டரி கட்டிடம், பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
கிளைகள் — கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, பம்பலப்பிட்டி.
அக்மி ரேடிங் கம்பனி லிமிட்டெட் இடத்திலும் கிடைக்கும்
6, கன்சிஸ்ட்டரி கட்டிடம், பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
TEAM

இராமநாதன் ம. ச. ச. நிலையம்

புத்தூர், ஞாயிறு

புத்தூர் சனசமூக நிலையத்தின் பெயரை இராமநாதன் மத்திய சனசமூகநிலையம் என்று மாற்றுவதென்ற தீர்மானம் நிலைய வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சிறுவர் பாடசாலையொன்று ஆரம்பித்து நடத்துவது என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்- இ. ச. தில்லைமு திருநாவுக்கரசு. தலைவர்- செ. மாணிக்கவாசகர். உபதலைவர்கள்- க. தம்பிராசா, க. தில்லையம்பலவாணர். இணைச் செயலாளர்கள்- கா. கனகசிங்கம், வை. திராசராசா. தனாதிகாரி- இ. நடராசா.

......

ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க வடபகுதிக் கிளையின் விசேஷ கமிட்டிக் கூட்டம் இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. சங்கப் பொதுக் காரியதரிசி திரு. எஸ். ஆரியவன்ச இதில் கலந்துகொண்டு "ஆசிரியர்கள் பிரச்னையும் தொழிற்சங்க வளர்ச்சியும்" என்னும் பொருள் பற்றிப் பேசுவார். ......

பரிசும் விருதும் பெற்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

செல்விகள் இ. சந்திராதினம், சி. தங்கராணி ஆகிய இருவரும் திருக்குறள் மனனப்போட்டியில் பரிசுபெற்றதுடன் "குறட்பாவலர்" என்ற விருதும் பெற்றுள்ளனர்.

வல்வை சிதம்பரக்கல்லூரியில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன. இருவரும் 1330 குறள்களையும் மனனம் செய்து காட்டியதால் மேற்படி பரிசும் விருதும் வழங்கப்பட்டன.

இன்றுகூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறையில் இன்று, கள் உற்பத்தி விற்பனவுச் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுமென கூட்டுறவு உத்தியோகத்தர் திரு எம். செல்லராசா தெரிவித்தார்.

சங்கங்களில், தினமும் சீவல் தொழிலாளர் பெருமளவில் சேர்ந்து வருகிறார்களென்றும், வடக்கில், எதிர்பார்த்ததைவிட தவறணை முறைக்கு பெருங் ஆதரவு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

......

புதிய ஜே. பி.

பருத்தித்துறை, ஞாயிறு

புத்தூர் கிராமசபையின் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. பரமநாதர் குமாரசன், யாழ்ப்பாண நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் முன்னிலையில் சமாதானநீதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சமயதீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

புங்குடுதீவு பெருமாள் கோவில் மண்டபத்தில் இம்மாதம் 16ந்திகதி பங்குனித் திங்களன்று, கரணவாய் வரணி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ செந்திநாதர் விஸ்வநாதக் குருக்களால் சைவ அன்பர்களுக்கு சமயதீட்சை செய்து வைக்கப்படும்.

தலைமன்னார் துறையில் கச்சதீவு யாத்திரிகர்

யாழ்ப்பாணம், திங்கள்

கச்சதீவுக்கு இன்று தலைமன்னார் துறைமுகத்திலிருந்தும் பேசாலை துறைமுகத்திலிருந்தும் யாத்திரிகர்கள் புறப்படுகின்றனர். தென்னிலங்கையிலிருந்து பெருந்தொகையான யாத்திரிகர்கள் இத்துறைமுகங்களை வந்தடைந்துள்ளனர்.

இத் துறைமுகங்களில் கடமையாற்றும் சுங்கப் பகுதியினர் யாத்திரிகர்கள் தங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களையும் உடுபிடவைகளையும் மாத்திரமே எடுத்துச்செல்ல அனுமதிப்பார்களென்றும் சந்தேகத்திற்கிடமானமுறையில் வேறு பொருட்களை யாத்திரிகர்கள் கொண்டு சென்றால் அவற்றை பறிமுதல்செய்வார்கள் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

கள்ளக்குடியேற்ற தடுப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதால் யாத்திரிகர்கள் தங்களுடன் இராஜ சேவகரின் அத்தாட்சிப் பத்திரத்தை எடுத்துச் செல்வது பல வழிகளிலும் அவர்களுக்கு நன்மையளிக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறைமுகங்களிலும் சுகாதாரப் பகுதியினர் அம்மை தடுப்புமருந்து

[6-ம் பக்கம் பார்க்க]

அடையாளம் காணப்படாத சடலம் யாருடையது?

வவுனியா, ஞாயிறு

செட்டிகுளம் காரியாதிகாரி பிரிவில் இருக்கும் மாகிகுளம் என்னுமிடத்தில் இனந்தெரியாத சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாற்பத்திரண்டு வயது மதிக்கத்தக்க ஆணினது சடலமே வவுனியாப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. டி. பி. சிறிவர்த்தன தலைமையில் தலத்திற்குச் சென்ற பொலிசார் விசாரணை நடாத்தியதுடன் புகைப்படமும் பிடிக்கப்பட்டது. சடலம் நான்கு நாட்களாக அடையாளம் காணப்படாததால் அடக்கம் செய்யப்பட்டு விட்டது.

வவுனியா பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. க. நடராட்னம், திரு. சா. தெய்வேந்திரம் ஆகியோர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

......

டக்ஸி சாரதிகளுக்கு புதிய சட்டம்

கோட்டை, ஞாயிறு

டக்ஸி சாரதிகளுக்கு சில புதிய சட்டங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன. இச்சட்டங்களைப் போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன தயாரித்துவருகிறார்.

இச்சட்டங்கள் தற்போதுள்ள நிலைமையைச் சீர்திருத்தக்கூடிய வகையில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்ஸி கட்டணம் முறைப்படுத்தவும், கட்டணம் ஒரு மைலுக்கு ஆகக்கூடிய தொகை எதுவென நிர்ணயிக்கவும் புதிய சட்டங்களில் வகைசெய்யப்படும். புதிய சட்டத்தின் கீழ் ஒவ்வொரு டாக்ஸி சாரதிக்கும் பதிவுப் புத்தகம் ஒன்று வழங்கப்படும். டக்ஸிகளில் மீட்டர் வாகனத்திற்குள்ளேயே பொருத்தப்பட்டிருக்கவேண்டுமென்று சட்டம் வலியுறுத்தும்.

......

படிக்கும்போதே உழைக்கும் வழி

கோட்டை, ஞாயிறு

மாணவர்கள் தமக்கு ஓய்வுநேரத்தில் அரசாங்கத்துக்கு வேலைசெய்து கொடுத்து ஊதியம்பெற வாய்ப்பளிக்கும் திட்டமொன்றை அரசு அமுல் நடத்தவிருக்கிறது.

வர்த்தக அமைச்சு தயாரித்துள்ள இத் திட்டத்தின்கீழ் மாணவ மாணவிகள் தமது ஓய்வு நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் வேலைக்கு அழைக்கப்படுவார்கள் இதனால் அவர்கள் ஊதியம்

தனியார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு மாற்றுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இந்நிலைமையை மாற்றியமைக்க நாம் பாடுபடவேண்டும்."

இவ்வாறு வடபிரதேச உத்தரவு பெற்ற அரிசி உணவு விநியோகஸ்தர் சங்கப் பொதுக் கூட்டத்தில் விசேஷமாகக் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை வர்த்தக சம்மேளனத் தலைவர் திரு. வை. பி. முத்துக்குமரன் கூறினார். யாழ் திருவாசக மன்ற மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வடபிரதேசச் சங்கத் தலைவர் திரு எஸ். செல்லத்துரை தலைமை வகித்தார்.

திரு. முத்துக்குமரன் தொடர்ந்து பேசுகையில் தனியாரிடமிருந்து அரிசி உபஉணவு விநியோகத்தை அரசு பொறுப்பேற்க விருந்ததைப் பின்போட்டமைக்குப் பிரதமர் ஸ்ரீமாவுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவித்தார்.

அ. இ. உ. வி. சம்மேளனச் செயலாளர் திரு பி. பி. ஜஸ்டின் சில்வாவும் விசேஷமாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

......

தார்ப் பீப்பா களவு

சங்கானை, ஞாயிறு

மாதகலில் வீடொன்றில் வைக்கப்பட்ட தார்ப் பீப்பாக்கள் வட்டுக்கோட்டையில் வைத்துப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டன. சங்கானைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் சிவபாதம், பண்டார ஆகியோர் நடத்திய திடீர் சோதனையிலேயே நெடுஞ்சாலைகள் அமைப்புப் பகுதிக்கு சொந்தமான இத் தார்ப் பீப்பாக்கள் கைப்பற்றப்பட்டன.

இதுசம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் வடலியடைப்பைச் சேர்ந்த அரியகுட்டி இராசையா, தொல்புரத்தைச் சேர்ந்த விநாசிமாசிமுத்து, சங்கானையைச் சேர்ந்த கணபதி இரத்தினம் ஆகியோர் கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

......

கொக்குவில் இந்து வெற்றி

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற ஒரு கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்து 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடந்தது.

மணிவாக்கு

நம் மனதை நம்மால் அடக்க முடியாவிடில் ஏன் நாம் வெளிச் சூழ்நிலைமீது குறைகூறவேண்டும்? உள்ளே நாம் உறுதியாக இருப்பின் வெளிச்சங்கடங்கள் எதுவும் நமக்குக் குறுக்கே நிற்கமுடியாது. முக்கியமான சங்கடம் நமக்குள்ளேதான் உள்ளது. அதாவது மனம்தான்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna Telephone: 389

திங்கள் விரோதிகிருது வருஷம் மாசிமாதம் 23-ந் திகதி (6-3 72)

கச்சதீவு

கச்சதீவு யாத்திரை நாளை ஆரம்பமாகிறது. ஆண்டுதோறும் கச்சதீவுத் திருநாள் தொடங்கும் சமயத்தில் 'கச்சதீவு யாருக்குச் சொந்தம்'? என்ற பிரச்னை இருநாடுகளிலும் எழுவது வழக்கமாகிவிட்டது. இதுபற்றி இப்போது பொதுமக்கள் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனாலும் கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் முன்னர் பக்தி சிரத்தையுடன் அங்குள்ள அந்தோனியாரைத் தரிசிக்கவும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவும் அதிகமாக சென்றிருக்கக்கூடும். இன்று கச்சதீவு யாத்திரை பெரும்பாலும் வேறு காரணங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றதென்பது பகிரங்க இரகசியம்.

கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் கச்சதீவுத் திருநாள் சமயத்தில்தான் சுலபமாக நடைபெறுகிறதென்று கூறப்படுவது உண்மையாக இருக்கலாம். இலங்கை இந்திய அரசாங்கங்களின் கட்டுப்பாட்டு நடவடிக்கை காரணமாக கள்ளக்கடத்தல் சட்டவிரோதக் குடியேற்றம் முதலியன இப்போது குறைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் முற்றாகவே இல்லாமலும் போகலாம்.

கச்சதீவுக்குச் செல்வோர் அனைவருமே கள்ளக்கடத்தலிலும் சட்டவிரோதக் குடியேற்றத்திலும்தான் ஈடுபடுகிறார்களென்று சொல்லமுடியாது. கடற்றொழிலையே முழுக்க முழுக்க நம்பி வாழும் கடற்றொழிலாளர் குடும்பங்கள் பலர் தங்கள் வாழ்வுக்குப் பாதுகாப்பளித்துவரும் அந்தோனியாருக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காகவும் செல்கிறார்கள்.

இவை தவிர இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பலர் பிரஜாவுரிமைப் பிரச்னைக்கு இன்னும் ஒரு முடிவுகாண முடியாமலுள்ளனர். தந்தை இலங்கையிலிருந்தால் மகன் இந்தியாவிலும் மகன் இலங்கையிலிருந்தால் தாயார் இந்தியாவிலும், கணவன் இங்கிருந்தால் மனைவி அங்குமாகவும் இருக்கும்நிலை இன்றுமிருக்கிறது. பிரஜாவுரிமைப் பிரச்னைக்கு முடிவு காணாத லட்சக்கணக்கானவர்கள் இந்தியாவுக்குச் செல்லமுடியாத நிலையில் பிரயாணக் கட்டுப்பாடு இருக்கிறது. ஒரு தடவை இந்தியாவுக்குச் சென்று வந்தால் பின்னர் இலங்கைப் பிரஜாவுரிமைபெறுவதில் பெரும் சங்கடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் பிரயாணத் தஸ்தாவேஜுகள் மற்றும் பெரும் சங்கடங்கள் இல்லாமல் மனைவியைப் பிரிந்திருக்கும் கணவன் தனது மனைவியையும் மகனைப் பிரிந்த தந்தை, மகனையும் தந்தையைப் பிரிந்து வாழும் மகன் தனது தந்தையையும் ஆண்டுக்கொரு தடவையாவது சந்தித்து இரண்டு மூன்று தினங்கள் ஒன்றாக வாழ்ந்து திரும்பும் ஓர் இணைப்புத் தீவாகவே கச்சதீவு விளங்குகிறதென்பது எல்லோரும் நன்கறிந்த உண்மை.

பிரஜாவுரிமை வழங்கும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்ற போதிலும் இது உடனடியாகச் செய்துமுடிக்கக்கூடிய விஷயமல்ல. எனவே பிரஜாவுரிமைப் பிரச்னைக்கு முடிவுகாணும் வரையிலாவது இருநாடுகளும் மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான யாத்திரை உரிமையை அனுபவிக்க இப்போதுள்ள கடும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி சுலபமாக்கினால் கச்சதீவுத் திருநாளில் அரசாங்கம் வீணாகப் பெரும் செலவை மேற்கொள்ள வேண்டியேற்படாது.

இதேசமயம் தேவையற்றமுறையில் கச்சதீவுக்கு யாத்திரை செய்து வீண் சங்கடத்துக்குள்ளாகாமல் நம் நாட்டு மக்கள் அதைத் தவிர்த்துக்கொள்வது அவர்களுக்கும் நாட்டுக்கும் நல்லது.

'சமயவிழிப்புணர்ச்சியை ஆசிரியர் ஏற்படுத்தவேண்டும்'

வவுனியா, ஞாயிறு

"ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தாவிட்டால் சமுதாய பாரம்பரியங்களை கட்டிக்காக்க முடியாது"

இவ்வாறு சாளம்பைக்குளம் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற முஹர்ரம் விழாவுக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய வவுனியா மாவட்ட கிராம நீதி மன்றங்களின் தலைவர் ஜனாப் ஏ. எம். எம். அலாவுத்தீன் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில், மேற்படி பாடசாலையில் புதிய கல்வித்திட்டத்தைப் போதிப்பதற்காக பெற்றோர்களால் நெசவுத்தறி, தச்சவேலை, மனையியல் உபகரணங்கள் அன்பளிக்கப்பட்டதையும் பெரிதாகப் பாராட்டியதோடு இப்பெற்றோர்களின் முன்மாதிரியை முழுது இஸ்லாமியர்கள் பின்பற்றுவார்களானால் இஸ்லாமிய இனம் இந்நாட்டின் கல்வித்துறையில் உன்னத இடத்தை விரைவில் பெற்றுவிடும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

நீதிபதியை வரவேற்ற பாடசாலை அதிபர் ஜனாப் எம். யூ. ஏ. ஸையூம் தனது உரையில் புதிய "மஹ்மூத் கல்வித் திட்டம் எமது நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்" எனக் கூறினார்.

மற்றும் ஆசிரியர்கள் ஜனாப் எஸ். ஏ. ஹீதா, எம். எஸ். யூசுப் லெவ்வை, எஸ். எம். ஏ. காதர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

குடியிருப்பாளருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்

வீட்டுச் சொந்தக்காரர்களை புதிய சட்டம் நிர்ப்பந்திக்கும்

கொழும்பு, திங்கள்

வாடகை வீடுகள் காலியாகும்போது புதிதாக எவருக்கும் குடியிருக்க விடுவதானால் குடியிருப்பாளரும் வீட்டுச் சொந்தக்காரரும் புதிதாக ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள வேண்டும். வீட்டுச் சொந்தக்காரருக்கு அல்லது அவரது பிள்ளைகளுக்கு வீடு குடியிருப்பதற்கு அவசியம் தேவைப்படும்பட்சத்தில் மாத்திரமே இந்த ஒப்பந்தம் மாற்றப்பட வேண்டும். உதாரணமாக இடமாற்றம் காரணமாக சொந்தக்காரர் வீட்டில் குடியிருக்கவருவாரானால் அல்லது அவரது புதல்விக்கு திருமணமாகி வீடுதேவைப்படுமானால் இந்த ஒப்பந்தம் மாற்றப்படலாம். இந்த அம்சங்கள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

வாடகை 30 ரூபாவாகவும் அதற்கு மேலாகவும் இருக்கும் வீடுகள் யாவும் வாடகைச் சபையில் பதிவு செய்துகொள்ளப்பட வேண்டும். இந்த [illegible] குடியிருப்பாளர்க[illegible] தெரிவு செய்யும். இந்த [illegible] தெரிவு சம்பந்தமாக வீட்டுச் சொந்தக்காரர் காரணம் எதுவும் தெரிவிக்காமலே மூன்று ஆட்சேபங்களைத் தெரிவிக்க முடியும். இது தவிர அவர் தெரிவிக்கும் ஆட்சேபங்கள் அனைத்துக்கும் காரணம் தெரிவிக்கப்பட வேண்டும். இவை வாடகைச்சபையினால் ஆராயப்படும். இச்சபையின் தீர்ப்பே இறுதியானதாகவுமிருக்கும்.

மார்ச் 1ம் திகதி அமுலுக்குவந்த புதியவாடகைச் சட்டம்பற்றி மேற்கண்ட விளக்கத்தை வீடமைப்பு மந்திரி திரு பீட்டர் கெனமன் தெரிவித்திருக்கிறார்.

குடியிருப்பாளர்கள் ஆட்சேபித்தபோதிலும் வீட்டில் திருத்தவேலைகளை சபையின் அனுமதியுடன் செய்வதற்கு சொந்தக்காரருக்கு உரிமையுண்டு. இதற்காக அவர் நிதி உதவிபெறமுடியும்.

மூன்றுமாத காலம் வாடகை செலுத்தாத குடியிருப்பாளர் வெளியேற்றப்படலாம். இதிலும் வாடகையைச் செலுத்தி குடியிருப்பாளர் தொடர்ந்து குடியிருக்க வசதியுண்டு. இந்த மூன்றுமாத தவணை வசதி ஒருமுறையே கொடுக்கப்படும்,

வீடு வாடகைக்கு விடுவதற்காக "சந்தோஷம்" அல்லது மூன்றுமாதகால முற்பணம் தவிர வேறு பணம் கொடுப்பது சட்டவிரோதமாகும்.

கோயில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக இருக்கும்.

உங்கள் பிரச்னைகளை இங்கு தெரிவிக்கவேண்டும். நாளை கொழும்பில் இவ்விஷயமாக ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறது. அக்கூட்டத்தில் உங்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறக்கூடியதாக இருக்கும்.

சாராய வடிசாலை

வடக்கில் சாராய வடிசாலை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஆறு மாத காலத்திற்குள் இவ்வடிசாலை பூர்த்தியாகிவிடும். அதன் பின் தினமும் 8000 கலன் கள்ளு இவ்வடிசாலைக்குத் தேவைப்படும். ஆதலால் கட்டுப்பாடின்றிக் கூடுதலாகக் கள் சீவினால் நஷ்டம்வருமென எவரும் அஞ்சவேண்டாம். சாராய வடிசாலைக்கே கள்ளு போதாத நிலை ஏற்படலாம்.

இன்று பனங்கள்ளு 10 அல்லது 15 சதத்திற்கு விற்கப்படுவதைக் காண்கிறோம். சாராய வடிசாலை நிறுவப்பட்டபின் 70 அல்லது 80 சதத்திற்கு விற்கக்கூடிய நிலை ஏற்படும். ஆதலால் 10 சதத்திற்குக் கள்ளு விற்கும் காலம் இனிமேல் வராது.

கலால் பகுதிச் சுப்பிரிண்டன் திரு. வி. சபாரத்தினம் பேசும்போது கூறியதாவது: "ஒரு வருட காலத்திற்குக் கள்ளுத் தவறணைகளுக்கு நாங்கள் போதிய ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் இருப்பு எடுக்கும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் தவறணை சுத்தமாக இருக்க வேண்டும். கள்ளில் கைப்பு இருக்கக்கூடாது. தவறணைக் கட்டிடங்களுக்கு ஒரே ஒரு முன் வாசல் மட்டுமே இருக்கவேண்டும்.

இடத்திற்குத் தகுந்த மாதிரிக் கள்ளுத் தவறணைகளைத் திறந்துவைக்கலாம். இரவு 9 மணி வரை கள்ளுத் தவறணைகளைத் திறந்துவைக்கலாம்.

……

தலைமன்னார்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டுவார்கள். அம்மை தடுப்புமருந்து கீறியதற்கு அத்தாட்சியாக அவர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரங்களை யாத்திரிகர்கள் பெறவேண்டும். யாத்திரை முடிந்து வரும்போது கடற்படையினரோ இராணுவத்தினரோ இவற்றைக் கேட்டால் காட்டுவதற்குத் தயாராக அத்தாட்சிப் பத்திரங்களை யாத்திரிகர்கள் தம்முடன் வைத்திருக்கவேண்டும்.

குருநகர் ஊர்காவற்றுறை நெடுந்தீவு குறிகாட்டுவான் ஆகிய துறைமுகங்களிலிருந்து யாத்திரிகர்கள் படகுகள் நாளை புறப்படுகின்றன.

ஊர்காவற்றுறை கடற்படைத்தளத்திலிருந்து ரோந்துப் படகுகள் நேற்று முன்தினமே கச்சதீவுக்கு சென்றுள்ளன. இவை கச்சதீவைச் சுற்றி ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

"மருந்து பெறுவதற்கு

ஆஸ்பத்திரி ஊழியருக்கு முத்திரை விலக்களிக்கவும்"

[illegible]பாணம், ஞாயிறு

"இற[illegible] ஊழியர்கள் தரத்தில[illegible]ம் டிஸ்பென்சர்களுக்கு [illegible] சிங்களத்தில் 8-ம் வகுப்[illegible] சித்தி பெற வேண்டும் [illegible] விதிக்கப்பட்டுள்ள[illegible] நீதியானதாகும். அர[illegible] சேவையில் கடமையா[illegible] சகல சிறு சேவை [illegible]யர்களுக்கும் 5-ம் வகுப்[illegible] தேர்ச்சி கேட்டிரு[illegible]ம் போது மருந்து [illegible]வயாளருக்கு மாத்திர[illegible] 8-ம் வகுப்பு சிங்கள [illegible] கேட்பது பாரபட்ச[illegible] நடவடிக்கையா[illegible] இதையிட்டு அரசினர் [illegible] விசாரித்து நிவாரணம் வழங்கவேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரசாங்க டிஸ்பென்சர்களின் சங்க யாழ்ப்பாணக் கிளைக்கூட்டத்தில் பேசும்போது மேற்படி சங்கக் காரியதரிசி திரு. என். எம். கந்தசாமி குறிப்பிட்டார். இக்கூட்டத்திற்கு திரு. இ. வைரமுத்து தலைமை வகித்தார்,

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

'சிங்களத் தேர்ச்சியை 8-ம் வகுப்பிலிருந்து குறைக்கவேண்டும். கிராமப்புறங்களில் கடமையாற்றும் சகல டிஸ்பென்சர்களும் சிங்களம் படிக்கக் கடமை லீவு வழங்கப்படவேண்டும்.

சிங்கள தேர்ச்சியின்மையால் வேலைநீக்கம் செய்யப்பட்ட மூன்று டிஸ்பென்சர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கவேண்டும்.

ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்கள் மருந்து எடுக்கும் விஷயத்தில் 25 சதம் முத்திரைத் திட்டத்திலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும்

மேலும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

……

நாளை

வடபகுதி அசைஸ் விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி அசைஸ் நீதிமன்ற முதலாவது [illegible] விசாரணை நாளை காலை யாழ் நகர மண்டபத்தில் நீதியரசர் ஜி. வீரமந்திரி முன்னிலையில் ஆரம்பமாகும் 16 வழக்குகள் விசாரணை செய்யப்படவிருக்கிறது.

மரண அறிவித்தல்

எமலி இராசம்மா சின்னத்துரை

காலஞ்சென்ற திரு. ஜே. எஸ். சின்னத்துரை அவர்களின் மனைவி எமலி இராசம்மா காலமாகிவிட்டார். இவர் மேரி தம்பிரத்தினம் அவர்களினதும் திரு. ஏ. எஸ் துரைசிங்கம் (அச்சுவேலி மகாவித்தியாலயம்) அவர்களினதும் தாயாரும் ஜே. பி. தம்பிரத்தினம், தெரேஸ், மகேஸ்வரி அவர்களினது மாமியாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல், உடுவில் சேமக்காலையில் இன்று (6-3-72) திங்கட்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் அடக்கம் செய்யப்படும். "பெதனி", மான்விக்கல் லேன், உடுவில், சுன்னாகம்.

4110

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனிக்காக யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.